PRANAV JOURAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# திருவானைக்காவும் இசை உருப்படிகளும்

**முனைவர் இரா.மாதவி**
**பேராசிரியர், இசைத்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்துப்பெருங்கோயில்கள்அனைத்தும்காண்பதற்குப்பதிலாகஇவற்றின்மீதுபாடப்பட்டபதிகங்கள்இசைப்பாடல்கள்ஆகியவற்றைக்கண்டஅளவிலேயேமனநிறைவுகொள்ளலாம். ஒவ்வொருபடைப்பும்ஆலயத்தைநம்கண்முன்னேநிறுத்துவனவாகஉள்ளன. பாடல்பெற்றதலங்கள்அனைத்திலுமேஇவ்வாறானபடைப்புகள்உண்டு. இவற்றுள்ஐம்பூதத்தலங்களுள்நீர்த்தலமாய்விளங்கும்திருவானைக்காகோயிலின்மீதுபாடப்பட்டஇலக்கியத்தொகுப்புகள்இசைவடிவங்கள்ஆகியவற்றினைஅருளியஅருளாளர்களைப்பற்றியும்அவர்கள்அருளியபாடல்கள்ஆகியவற்றின்இசை, சிறப்பையும்இங்குகூறுவதேநோக்கமாகும்.

திருவானைக்காதலஇசைவடிவங்கள்என்னும்தலைப்பின்கீழ்கீர்த்தனை, க்ருதி, பதம்ஆகியஇசைவடிவங்களில்இயலிசைப்புலவர்கள்அருளியுள்ளபாடல்கள்ஊத்துக்காடு வெங்கடசுப்பையரின்காமாக்ஷிநவாவரணகீர்த்தனைகளின்பலஸ்ருதியாகஅமைந்தகீர்த்தனைசகஜிமகாராஜாவின்திருவானைக்காதலப்பதம், ஸ்ரீச்யாமாசாஸ்திரிகள், முத்துஸ்வாமிதீக்ஷிதர்ஆகியோரின்க்ருதிகள்பாபநாசம்சிவன், நாகைஎம்.எஸ்.ராமசுவாமி, ஸ்ரீவனிதாதாசரின்கீர்த்தனைகள்போன்றஇன்னும்பிறஅருளாளர்களின்பாடல்களின்இசைவடிவங்களாகஇனம்காணப்பட்டுஇக்கட்டுரையில்விளக்கப்பட்டுள்ளன.

இசையின் இருப்பிடம் இறைவன் என்றும் இறைவனின் இருப்பிடம் இசை என்றும் கூறலாம். இசையே இறைவன். இறைவனே இசை எனவும் கருதலாம். இறைவனின் புகழை இசையின் மூலம் பாடுவதே இசையின் நோக்கம். இறைவனை வழிபடும்

ISSN: 2582-9513

மூலமாகவும், அவன் புகழைப் பாடும் நிலையிலும், பக்தியின் அடிப்படையிலும் தோன்றியவையே இசைப்பாடல்கள் இப்பாடல்கள் பல்வேறு வடிவங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. நாயன்மார்களின் பாடல்கள் பதிகங்களாகவும், மற்றும் ஆழ்வார்களின் பாடல்கள் பாசுரங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பதிகங்கள் மற்றும் பாசுரங்கள் பல்லவி, அனுப்பல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடு இல்லாமல் பல அடிகளைக் கொண்டுள்ளன. முதல் முதலாக 15ஆம் நூற்றாண்டில் பல்லவி, அனுபல்லவி, சரணத்துடன் கீர்த்தனை வடிவமாக தெலுங்கில் பாடல் இயற்றியவர் தாள்ளபாக்கம் அன்னமாச் சார்யார் ஆவார். அவருக்குப் பின் முதல் முதலில் தமிழில் முத்துத் தாண்டவர் இவ்வமைப்புடன் கீர்த்தனை இயற்றியவர். இவரைத் தொடர்ந்து எண்ணற்ற வாக்கேயக்காரர்கள் பல தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவன் இறைவியைப் புகழ்ந்து கீர்த்தனைகளும், கிருதிகளும் இயற்றி இசை உலகுக்கு அளித்துள்ளார்கள்.

கீர்த்தனை கிருதியை தவிர பதம், ராகமாலிகாக, ஜாவளி, தில்லானா போன்ற பல வகை இசை வடிவங்கள் அதற்கே உரித்தான இலக்கணத்துடன் இசை மற்றும் நாட்டிய அரங்குகளை அலங்கரித்து வருகின்றன.

இவ்வகையில் திருவானைக்கா தலத்தை பற்றிய இசை வடிவங்கள் அவற்றை அருளிய அருளாளர்கள் இறைவன் இறைவி போற்றப்பட்டச் செய்திகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

**ஊத்துக்ககாடு வெங்கடசுப்பைய்யப்பரின் பாடலில் அகிலாண்டேஸ்வரி**

சங்கீத மும்மூர்த்திகளுக்கு காலத்தால் முற்பட்ட இவர் பல இசை உருப்படிகளை பல மொழிகள் இயற்றியுள்ளார். இவருடைய நவாவரண கீர்த்தனைகளை முன்முதிரியாகக் கொண்டு முத்துஸ்வாமி தீட்சதர், கமலாம்பா நவாவர்ணம் அபயாம்பா நவாவர்ணம் போன்றவற்றை இயற்றிருக்கலாம். வெங்கட சுப்பைய்யரின் காமாட்சி நவாவர்ணத் தொகுதியில் ஒன்பது ஆவரண கீர்த்தனைகள் தவிர முதல் இரண்டு கீர்த்தனைகள் தியான கீர்த்தனைகளாகவும் இறுதியில் பலஸ்ருதியாக “அகிலாண்டேஸ்வரி ஸஹாயம்” என்ற தலைப்பில் “ஹலதரானஜம்” என்ற கீர்த்தனை

மணிரங்கு இராகத்தில் காணப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணரை அடைய அகிலாண்டேஸ்வரியின் சகாயம் வேண்டி பாடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**சஹஜி மன்னரின் திருவானைக்கா தலப்பதம்**

தஞ்சையில் தென்னக இசையை வளமைப்படுத்திய பெருமையின் ஒரு பங்கு மராட்டிய மன்னர்களைச் சேரும் அவர்கள் ஆட்சியின் போது இசை பெரிதும் செழித்து வளர்ந்தோங்கியது. மன்னர்கள் இசைக் கலைஞர்கள் மற்றும் வாக்யக்கேயகாரர்களை ஆதாரித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களே பல நுண்கலைகளில் சிறந்தும் விளங்கியுள்ளனர். இசை மற்றும் இசையியலில் உன்னதமாக விளங்கி பல அரிய பாடல்களையும் இசை நூல்களையும் இசை உலகிற்கு அளித்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் சஹஜிராஜா போன்ஸ்லே இவர் பதினேழாம் நூற்றாண்டில் இறுதியில் தஞ்சை மண்டலத்தை ஆட்சி செய்தவர். மாமன்னர் வீரசிவாஜியின் சகோதரர் ஏகோஜி என்கிற வெங்கோஜி மன்னருக்கும் தீபாம்பிகை என்பவருக்கும் மூத்த புதல்வராகப் பிறந்தவர்.

சஹஜி மன்னர் பல தலங்களில் கோயில் கொண்டுள்ள தெய்வங்களின் பெயரில் தெலுங்கு, மராட்டிய மொழிகளில் பல பாடல்கள் இயற்றியுள்ளார். திருவானைக்கா அண்ணலான ஜம்புகேசுவரர் பெயரில் “பதிகுரு பதிவேலு” என்ற பதத்தினை தெலுங்கு மொழியில் இயற்றியுள்ளார். இப்பதத்தின் இராகம் கல்யாணி தாளம் ஆதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாயகி பாடுவதாக அமைந்துள்ளது. திருத்தலப்பதங்கள் என்னும் நூல் வடிவில் வெளிவந்துள்ளன சஹஜி மன்னரின் திருத்தலப்பதங்கள் என்னும் நூல் வடிவில் வெளிவந்துள்ள சாஹஜி மன்னரின் பதங்களானவை பல்லவி சரணம், என்ற அமைப்பில் காணப்படுகின்றன. கல்யாணி இராகத்தில் அமைந்த திருவானைக்கா பதமானது பல்லவி இரண்டு பாங்களாகவும் முதல் இரண்டு சரணங்களும் நான்கு பாதங்களாகவும், மூன்றாவது சரணம் ஒரே ஒரு வரியாகவும் காணப்படுகிறது. அர்த்த பாவத்தை வைத்துப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு சரணத்திற்குப் பிறகும், இச்சரணத்தைப் பாடினால் பொருத்தமாக இருப்பது போல் உள்ளது. இதில் “தாயாக ஜம்புகேசுரி” என்ற வார்த்தை வாக்கேயக்கார முத்திரையாக அமைந்துள்ளது.

ISSN: 2582-9513

### ஸ்ரீ சியாமா சாஸ்திரின் திருவானைக்காத் தல கிருதிகள்

சங்கீத மும்மூர்த்திகளுள் மூத்தவராகக் கருதப்படும் ஸ்ரீ சியாமா சாஸ்திரி ஒரு சக்தி உபாசகர், பங்காரு காமாட்சி அம்மனின் பெயரில் ஈடற்ற பக்தி கொண்டார். சமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் கிருதிகள் புனைந்துள்ளார். தீவிர தேவி பக்தராக விளங்கியதால் அதிகப்படியான உருப்படிகள் தேவியின் பெயரிலேயே அமைந்துள்ளன. இவர் ச்யாம கிருஷ்ண என்ற முத்திரையை தன் உருப்படிகளில் கையாண்டுள்ளார்.300க்கும் மேற்பட்ட உருப்படிகள் இயற்றியுள்ளார். இவற்றுள் அகிலாண்டேஸ்வரி, “துருவிக நன்னுப்ரோவரதா” “சங்கரி சங்குரு”, “எந்நேரமும், எந்நேரமும் உன் நாமம்” ஆகிய பாடல்கள் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி அம்மனின் பெயரில் இயற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுளளன. இவற்றுள் அகிலாண்டேஸ்வரி துருவிக, “நன்னுப்ரோவரதா” என்ற கிருதிகள் தெலுங்கிலும் சங்கரி சங்குரு என்ற கிருதி சமஸ்கிருததிலும் “எந்நேரமும்” மற்றும் எந்நேரமும் உன்நாமம் ஆகிய க்ருதிகள் தமிழிலும் இயற்றப்பட்டுள்ளன. இதில் நன்னுப்ரோவராதா – கௌளி பந்து இராகத்திலும் மிஸ்ரசா தாளத்திலும் துருஸுக என்ற க்ருதி கர்னாடக காபிராகம் ஆதிதாளத்திலும் எந்நேரமும் உன் நாமம் என்ற க்ருதி பூர்வி கல்யாணி ராகம் திஸ்ர திருபுட தாளத்திலும், எந்நேரமும் என்ற க்ருதி புன்னாகவராளி ராகம் த்ரிபுட தாளத்திலும் த்ரிபுட தாளத்திலும் சங்கரி சங்குரு என்ற க்ருதி ஸாவேரி ராகம் திஸ்ர திரிட தாளத்திலும், இவ்வாறாக ஐந்து பாடல்களை சியாமாசாஸ்திரிகள் அகிலாண்டேஸ்வரி அன்னையின் பெயரில் இயற்றியுள்ளார். அன்னையின் பெருமைகளும், இவர் அன்னையின் மீது கொண்ட அன்பும் இப்பாடல்களில் மிளிர்கின்றன.

### முத்துஸ்வாமி தீசஷ்தரின் திருவானைக்கா கிருதிகள்

கர்நாடக இசையின் வரலாற்றில் தீட்க்ஷிதர் குடும்பத்தினர் ஒரு தனி இடத்தை வகிக்கின்றன. சங்கீத மும்மூர்த்திகளின் இளையவர் ஆவார். வைத்தீஸ்வரன் கோயில் முத்துகுமாரசுவாமி அருளினால் 1776ம் வருடம் திருவாரூரில் பிறந்து முத்துஸ்வாமி என்று பெயரிடப்பட்டார். இவர் பல தலங்களுக்குச் சென்று அங்குள்ள தெய்வத்தைப் பற்றி பல க்ருதிகள் இயற்றியுள்ளார். வாழ்க்கையின் பல சூழ்நிலைகளிலும் பாடல்கள் பாடியுள்ளார்.

ISSN: 2582-9513

அதிக எண்ணிக்கையில் சமுதாய க்ருதிகள் பாடியுள்ளார். ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாஸம் ஆகிய ஐந்து லிங்கங்கள் பஞ்ச பூதத்தை குறிக்கும் வகையில் தோன்றியவை. ஆதலால் இவ்வைந்து லிங்கத்தின் பெயரில் இயற்றப்பட்டமையால் பஞ்சலிங்கஸ்தல க்ருதிகள் என்னும் இவை அழைக்கப்படுகின்றன. இவற்றுள் நீர் தலமான திருவானைக்காவலில் இயற்றப்பட்ட ஜம்புபதே என்ற க்ருதியும் அகிலாண்டேஸ்வரியின் பெயரில் இயற்றப்பட்டுள்ள மற்ற மூன்று க்ருதிகளும் இங்கு ஆராயப்படுகின்றன.

முத்துஸ்வாமி தீக்ஷ்தர் திருவானைக்கா இறைவன் இறைவி பெயரில் இயற்றிய க்ருதிகள்

| | க்ருதி | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | ஜம்புபதே | யமுனா கல்யாணி | ரூபகம் |
| 2. | அகிலாண்டேஸ்வரி | த்விஜாவந்தி | ஆதி |
| 3. | ஸ்ரீ மாத சிவவா மாங்கே | பேகடா | ஆதி |
| 4. | அகிலாண்டேஸ்வர்யை | ஆரபி | ஆதி |

இந்நான்கு க்ருதிகளும் தீக்ஷ்தர் திருவானைக்கா அண்ணல் மற்றும் அன்னையின் அருளைப் பற்றி பாடப்பட்டவையாகும். முத்துஸ்வாமி தீக்ஷ்தரின் "அகிலாண்டேஸ்வரி ரசத்தோ என்ற சுத்தசாவேரி ராக க்ருதியிலும்" "ஜகதீஸ மனோஹரி" என்ற பெயர் ஈஸ மனோஹரி ராக க்ருதியிலும் "அகிலாண்டேஸ்வரி" என்ற பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளன. பொதுவாக தீக்ஷ்தரின் திருவானைக்கா க்ருதிகள் என்றால் ஜம்புபதே மற்றும் அகிலாண்டேஸ்வரி மற்றுமே பிரபலமாக கூறப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மற்ற க்ருதிகள் பாடப்படாததால் பிரபலமடையாமல் உள்ளன. இதுபோன்ற க்ருதிகளை இசையுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**நாகை ஸ்ரீ என்.எஸ். ராமஸ்வாமி ஐயர் கீர்த்தனைகள்.**

இசையுலகில் 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் எண்ணற்ற இயலிசைப் புலவர்களும் சாகித்திய கர்த்தாக்களும் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவர்

ISSN: 2582-9513

நாகப்பட்டிணம் ஶ்ரீ.என்.எஸ் ராமஸ்வாமி ஐயர். சிறு வயது முதல் கதாகாலட்சேபங்கள் அகண்ட பஜனைகள் போன்ற பல ஆன்மீக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான வாய்பினை பெற்றார். அவ்வப்போது ஓய்வு நேரங்களில் பரம்பொருளின் மகிமையை பல கோணங்களில் வாழ்ந்து தமிழிலும், சமஸ்கிருதத்திலும் அர்த்த பாவத்துடன் ராக தாளத்துடனும் சுமார் 40 கீர்த்தனைகளைத் தொகுத்து அமைத்திருக்கிறார்.

இதில் திருவானைக்கா தல அண்ணலான ஜம்புகேசுவரரை இரு கீர்த்தனைகளிலும் அகிலாண்டேஸ்வரி அன்னையை இரு கீர்த்தனைகளிலும் ஆராதித்துள்ளார். “அம்புஸ்தல ஜம்புலிங்கபதே” பெயரிலும், “ஜகதம்பா ஜகஜ் ஜனனி” மற்றும் அம்பாத்ருபுர சுந்தரி என்ற கீர்த்தனைகள் அகிலாண்டேஸ்வரியின் பெயரிலும் இயற்றப்பட்டுள்ளன. காபி, நவரஸகனடா, நாயகி, கல்யாணி போன்ற இராகங்களில் அமைந்துள்ளன. இவரும் சிவனைப்போன்று தமிழ்க் கீர்த்தனைகளில் வடமொழி சொல்லாட்சியைப் புகுத்தியுள்ளார். இவருடைய பல கீர்த்தனைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் காணப்படுகின்றன. சில கீர்த்தனைகள் மத்யமகால சாகித்தியம் “முடுக்கு” என குறிப்பிடப்பட்டு காணப்படுகிறது. இவ்வாறு சிறப்புற கீர்த்தனைகள் இயற்றியிருப்பினும் சிவனின் பாடல்கள் பிரபலமானதைப்போல் இவர் கீர்த்தனைகள் பிரபலமாகமல் இருப்பதற்கு காரணம் நூல் வடிவில் 2004ல் தான் பிரசுரீக்கப்பட்டது. இவற்றை பிரபலப்படுத்துவது இசைக் கலைஞர்களின் கடமையாகும்.

**பாபநாசம் சிவனின் பாடலில் திருவானைக்கா நாயகி**

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இசை கலைஞர் மற்றும் இயலிசைப் புலவர்களுள் மிகவும் முக்கியமானவர் பாபநாசம் சிவன். இவர் க்ருதிகளைத் தவிர, தானவர்ணம், பதவர்ணம், ராகமாளிகை போன்ற இசை வடிவங்களையும் இயற்றியுள்ளார். இவருடைய தமிழ் பாடல்களில் ஆங்காங்கே சமஸ்கிருத சொல்லாட்சியையும், காணலாம். சிவன், விஷ்ணு, அம்பாள், லக்ஷ்மி போன்ற பல கடவுள்களின் பெயரில் பாடல்கள் இயற்றியிருந்தாலும் இவர் இயற்றிய அம்பிகை

பெயரில் அமைந்த க்ருதிகளுள் ஒன்று திருவானைக்கா அகிலாண்ட நாயகியைப் பற்றியதாகும். இப்பாடல் சங்கராபரணம் இராகம் ஆதி தாளத்தில் காணப்படுகிறது. இக்ருதி பல்லவி, அனுபல்லவி, சரணம் மற்றும் மத்யமகால சாகித்தியம் ஆகிய அமைப்பில் உள்ளது. இப்பாடலின் பல்லவியில் "அகிலாண்டநாயகி" என்பது தேவத முத்திரையாவும் "அப்புலிங்கம்" என்பது முத்திரையாகவும் 'திருவானைக்காவல்' என்பது தலமுத்திரையாக அனுபல்லவியிலும் இடம் பெற்றுள்ளன.

**ஸ்ரீ வனிதா தாசரின் கீர்த்தனையில் ஆணைக்காக அன்னை**

20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஸ்ரீவனிதாதாசர் என அழைக்கப்படும் டி.ஜி.கிருஷ்ணய்யர். இவர் பல கீர்த்தனைகளை இயற்றி பஜனைகளிலும், தலங்களை தரிசனம் செய்யும் போதும் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் இயற்றிய பாடல்களைப்பாடி பிரபலப்படுத்திய பெருமை திரு செம்பை வைத்திய நாத பாகவதரையே சாரும். இவர் இயற்றிய கீர்த்தனைகள் நூல் வடிவில் பிரசுரிக்கச் செய்த பெருமை செம்பை வைத்தியநாத பாகவதரையேச் சாரும்.

இவர் இயற்றியுள்ள கீர்த்தனைகளில் திருவானைக்காக அன்னை அகிலாண்டேஸ்வரியை பற்றி "அகிலாண்டேஸ்வரி" என்ற கீர்த்தனை கானடா ராகம் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

இப்பாடலில் அகிலாண்டேஸ்வரி என்பது தேவத முத்திரையாகவும் "கஜாரண்யம்" என்பது தல முத்திரையாவும் ஸ்ரீ வனிதா என்பது வாக்கேயக்கார முத்திரையாவும் இடம் பெற்றுள்ளன.

**மன்னார்குடி திரு ரா.பார்த்தசாரதி ஐயங்காரின் பாடல்களில் அகிலாண்டேஸ்வரி**

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர்களுள் ஒருவர் மன்னார்குடி ரா.பார்த்தசாரதி ஐயங்கார். இவர் வெளியிட்டுள்ள இசை மணிக்கோவை என்ற நூலின் இரண்டு பாகங்களிலும் பல கீர்த்தனைகள் ராக தாளக் குறிப்புடன் சுத்த சாகித்தியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அன்னையின் பெயரில் முதல் பாகத்தில் ஒரு கீர்த்தனையும்

இரண்டாம் பாகத்தால் இரண்டு கீர்த்தனைகளும் காணப்படுகின்றன. ஆரபி, அமிர்தவர்ஷிணி, கானடா, போன்ற இராகங்களில் அமைந்துள்ளன.

**பிற இயலிசைப் புலவர்கள்**

மேலும் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி நாயகியின் பெயரில் பேராசிரியர் என்.எஸ்.ராமச்சந்திரன், திருச்சி பாரதன், வடலூர் அடிப்பொடியன் புலவர் மணிவாசகன், கவிஞர் லெ.சுப்பிரமணியன், முத்தையா பாகவதர், பெரியசாமி தூரன், கவியோகி சுத்தானந்த பாரதி, டி.பட்டம்மாள், ராம சந்த்ர கவி போன்றோரின் பாடல்களில் "அகிலாண்டேஸ்வரி" என்ற பெயர் அம்பாளின் பல நாமங்களைப் பாடும் பொழுது இடம் பெற்றுள்ளது.

இசை வடிவங்களில் திருவானைக்கா என்னும் தலைப்பில் இயலிசைப் புலவர்கள், கீர்த்தனை க்ருதி, பதம் போன்ற வடிவங்களில் இயற்றப்பட்ட திருவானைக்கா தலப் பாடல்கள் பற்றி விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன. 15ஆம் நூற்றாண்டு முதல் 21ஆம் நூற்றாண்டு வரையிலான அருளாளர்களின் பாடல்கள் எடுத்து இங்கு விரிவாக விளக்கப்பட்டுளளன. இவ்விசை வடிவங்கள் அனைத்தையும் அனைவரும் அறிந்து பிரபலப்படுத்துவது சமுதாயத்து வாழ் இசைக் கலைஞர்களின் கடமையும் ஆகும்.

**துணைநூற்பட்டியல்**

1. திருத்தலப்பதிகங்கள் – சகஜி மன்னர் இயற்றியது. சரஸ்வதி மகால் நூலகம்

2. Sangeetha Sampradaya Pradarsin 1905

3. Syama Sastry's Compositions – Vidya Shankar

4. Great Composers Book I pro Sambamoorthy

5. ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதரின் 101 கீர்த்தனைகள் டி.எம்.தியாகராஜன்

ISSN: 2582-9513

6. ஸ்ரீ வனிதா தாசர் கீர்த்தனைகள்

7. கிருதி மணி மாலை 1